மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 14–9–2011 அன்று சட்டமன்ற உறுப்பினர்களின் சம்பளத்தை 55,000 ரூபாயாக உயர்த்திக் கொடுத்தார் என்பதை இந்த நேரத்திலே நான் குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிடுகிறபொழுது, **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டுவிட்டன. அதில் மேற்கொண்டு எதுவும் பதிவு செய்ய வேண்டாம். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் சொன்னது உட்பட, அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றது.

7. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2017 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வு செய்யவும் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

பிற்பகல் 2–10

8. தடை செய்யப்பட்ட பொருளை அவையில் காண்பித்தது குறித்து—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கரி. இராமசாமி, தயவு செய்து உட்காருங்கள். (குறுக்கீடு) அதற்கெல்லாம் ஏற்கெனவே பதில் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடு) அதுகுறித்து, மேற்கொண்டு பேச முடியாது. (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசப் போகிறார். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் எழுந்து, எழுந்து நின்றால் எப்படி? (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.